Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

8

# பெரியபுராணத்தில் காணப்படும் இசை

**கோ.உமா**
**தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**சேலம்-11**
umatamil25@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

கி.பி. 12ம் நூற்றாண்டில் சேக்கிழாரால் இயற்றப்பட்ட பெரியபுராணம் 63 நாயன்மார்கள் மற்றும் 9 தொகையடியார்களின் வரலாற்றை எடுத்துரைப்பது. நாயன்மார்கள் பாடி தொழுது பாமாலைச் சூட்டி வழிபட்ட விதத்தையும் அவர்கள் வீடுபேறு அடைந்த மார்க்கத்தையும் எடுத்துரைக்கின்றது. அவற்றுள் இசைக்கலை நுணுக்கள் காணப்படுவதை ஆய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**Abstract**

Composed by sekizhar in the 12th country AD, the Great purana recounts the history of the 63 Nayanmars and 9 sumam Adiyars. It tells how the Nayanmars worshiped by singing prayers the puepose of this study to explose the musical nuances found in them.

**குறிச்சொற்கள்**

வழிபாடு, பதிகம், ஓதுவார், இந்தளம், நட்டபாடை, பண், யாழ், நாயன்மார்.

**Key words**

worship, log, will read, Inthalam, Nattapadai, Pan, Yaal, Nayanmar.

**முன்னுரை**

தமிழரின் பண்பாடு இசையில் இணைந்தது என்பதை தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. குறிப்பாக பரிபாடல், பக்தி இலக்கியங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள் ஆகியன எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் கி.பி. 12ம் நூற்றாண்டில் எழுந்த பெரியபுராணம் நாயன்மார்களின் பாடல் நயங்களைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**பெரியபுராணம்**

திருத்தொண்டர் புராணம் எனும் பெயருடைய பெரியபுராணம்தமிழ் தேசியக் காப்பியம் எனப் போற்றப்படுகிறது. 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை தெளிவாக எடுத்துரைக்கும் வரலாற்றுப் பெட்டகமாகவும் திகழ்கிறது. நாயன்மார்களின் பாடல்கள் பதிகங்களாக பகுக்கப்பட்டுள்ளது. பல்வேறு பதிகளுக்குச் சென்று நாளும் பண்ணிசையால் பாடப்பட்டுள்ளது.

பதிகங்கள் பத்து பத்தாகப் பாடல்களைப் பாடும் முறையாகும். பதிகங்கள் என்ற முறையில் முன்னோடியாகத் திகழ்பவர் காரைக்காலம்மையார் ஆவார். இவர் பாடிய பதிகங்கள் "மூத்த திருப்பதிகங்கள்" என அழைக்கப்படுகின்றன.

இவரைத் தொடர்ந்து சைவ குரவர் நால்வருள் சம்பந்தர், அப்பர், சுந்தரரின் பாடல்கள் தமிழ்ப்பண்ணிசையால் அமைந்துள்ளன. தாண்டகம் பாடுவதில் வல்லவரான அப்பர் 'தாண்டக வேந்தர் ' என அழைக்கப்பட்டார்.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்

பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்

மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி" (பெ.பு. 1776)

திருநாவுக்கரசர் அருளிய தமிழ்ப்பதிகமான தேவாரத்தில் 21 பண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திருஞானசம்பந்தர்**

சம்பந்தரின் பாடல்கள் யாழ் கொண்டு இசைத்துப் பாடும் வல்லமையை உடையது-பண்டைக் காலத்தில் அதிகம் பயன்பாட்டில் இருந்த இசைக்கருவியாக 'யாழ்' அறியப்படுகிறது.

யாழைக் கொண்டு இசைக்கப்படாத பாடலையும் ஞானசம்பந்தர் பாடியுள்ளமையை,

"மாதர்தம் ஏவலாலே மனைத்தொழில் மாக்கள் மற்றிங்

கேதமொன் றில்லை உள்ளே பள்ளிகொள் கின்றார் என்னைத்

தீதனை வில்லை யேனும் என்மனத தெருளா தின்னம்

ஆதலால் அவரைக் காண வேண்டும் என்றருளிச் செய்தார்" (பெ.பு. 3556)

என்ற பாடலால் அறிந்துகொள்ளமுடிகிறது.

இவ்வாறு இசையால் இறைவனை வசமாக்கியவர் ஞானசம்பந்தராவார்.

**திருநீலகண்ட யாழ்ப்பாணர்**

நாயன்மார்கள் ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய வழிகளில் இறைவனை துதித்து இறையடி சேர்ந்தனர். அவர்களுள் திருநீலகண்ட யாழ்ப்பாணர் நீர்மையுடைய இசைப்பொருந்திய யாழினது தலைவராக விளங்கி யாழிசையால் இறையடி இணைந்தவராவார்.

“மலைஈ ரேழு கோத்த பண்ணினிற் கருவி வீக்கிக்

காலமா தரித்த பண்ணிற் சைபலமுறையும் ஆராய்ந்து” (பெ.பு. 4216)

என்ற பாடல் விளக்குகிறது.

பண்டைத் தமிழ் ஒலியை ஏழாகப் பகுத்து இளி, விளரி, தாரம், குரல், தத்தம், கைக்கிளை, உழை, என்றுரைத்தனர்.

“குடம் முதல் இடம் முறையாகக் குரல் துத்தம்

கைக்கிளை உழை இளி விளரி தாரம் என

விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே”(சிலம்பு. 13 (8-10)

என்ற சிலம்படிகள் எடுத்துரைக்கின்றது. இசையைப் பண் என்று உரைப்பது தமிழ்மரபு.

“பண்ணென்னாம் பாடற்கியை பின்றேல் கண்ணென்னாம்

கண்ணோட்டம் இல்லாத கண்” (குறள். 573)

என்பதிலிருந்து அறியமுடிகிறது. இவ்வாறு அல்லாத பெரியபுராணம் சுட்டும் பண்கள் பல. இந்தளம், குறிஞ்சிப்பண், மருதப்பண், ஆதிதாளம், முல்லைப்பண், செந்துருத்திப் பண், நட்டபாடை, காஞ்சிப்பண், பஞ்சுரப்பண் என்பனவாகும்.

இந்தளம் என்பது பண்டைய பண்ணாகும். இசையானது இலக்கிய, இலக்கண , பரப்பிலும் அமையும் என்பதை சேக்கிழார் உரைத்துள்ளார். சேக்கிழார் இந்தளப் பண்ணில் நரம்பமைவு கூறியுள்ளார்.

“பித்தா பிறைசூடிபெருமானே அருளாளா

எத்தன் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை

வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்" (7-12)

என்ற பதிகம் இந்தளப்பண்ணில் அமைந்துள்ளதை அறியலாம்.

"முறையால்வரு மதுரத்துடன் மொழி இந்தளம்

முதலில் குறையா நிலை மும்மைப்பாடி கூடும்

கிழமையினால்" (பெ.பு. 221)

என்றடிகள் மூலம் அறியலாம்.

திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணத்தில் புல்லாங்குழலின் ஓசையைப் பெருக்கும் வண்டுகள் குறிஞ்சி நிலத்தில் குறிஞ்சிப் பண்ணை இசைத்தன என்பதை,

"ஏயுமாறு பல் உயிர்களுக்கு எல்லையில் கருணைத்

தாய் அனாள் தனி ஆயின தலைவரைத் தழுவ" (பெ.பு. 1067)

என்ற பாடலில் விளக்குகிறார். யாழ்க்குறிஞ்சி, யாமயாழ், அகம் குறிஞ்சி என்ற பெயர்கள் குறிஞ்சிப் பண்ணுக்கு அமைந்துள்ளதை சேக்கிழார் விளக்குகிறார்.

கொடிப்பாலை, கோடிப்பாலை, மருதயாழ் என்ற பெயருடையது மருதப்பண் ஆகும். குஞ்குலியக் கலியநாயனார் புராணத்தில் மருதப்பண் இசைத்து பாடும் உழவர்குலப் பெண்களை

"இடம்படு பண்ணை தோறும்

எழுவன மருதம் பாடல்" (பெ.பு. 838)

என்ற பாடல் அடிகள் வாயிலாக அறிந்துகொள்ளமுடிகிறது.

108 தாளங்களில் ஒன்றான ஆதிதாளம் பாடலமைப்பினை

"நிலவும் இசை முதல் தாளம் நிரம்பிய நீர்மையில் நிகழ" (பெ.பு. 2898)

என்ற பாடல் உரைக்கின்றது. ஆனாய நாயனார் புராணத்தில் முல்லைப் பண் குறித்து விளக்குகிறார்.

"ஆடுமயில் இனங்களும் அங்கு அசைவு

அயர்ந்து மருங்கு அணுக" (பெ.பு . 961)

என்ற பாடல் அழகுற எடுத்துரைக்கின்றது.

**தொகுப்புரை**

பெரியபுராணம் பக்திச்சுவை மட்டுமல்லாத தமிழிசையையும் விளக்குகிறது. எழு சுரங்களால் அமைந்த தமிழ்ப் பண்கள் நாயன்மார்களின் பதிகங்களில் அமைந்துள்ளதை விளக்குகிறது.

ஞானசம்பந்தர், அப்பர், திருநீலகண்டயாழ்ப் பாணம், திருகுறிப்புத் தொண்டர், காரைக்கால் அம்மையார், ஆனாயநாயனார், குங்குலிய கலிய நாயனார், புராணங்களை விளக்குகையில் தமிழ் இசைக்குறித்து தெளிவாக விளக்குவதை அறியலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. ப.ஆறுமுகம் (ப.ஆ.), சிலப்பதிகாரம், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 600108, மு.ப. 1996
2. வ.த. இராமசுப்பிரமணியம் (உ.ஆ.), பெரியபுராணம் மூலமும் உரையும், திருமகள் நிலையம், தி.நகர், சென்னை-17, மு.பதிப்பு, 2008.
3. கௌமாரீஸ்வரி (ப.ஆ.), திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை-600 014, மு.ப. 2009